ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2415 - 2024 දෙසැම්බර් මස 13 වැනි සිකුරාදා - 2024.12.13

2415 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | அரசாங்கஅறிவித்தல்கள் | 2305 |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 2304 | விலைக் கட்டளைகள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கைமத்தியவங்கியின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்கசேவைஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கைஅரசாங்ககணக்குவிபரங்கள் | - |
| நீதிச்சேவைஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவுசெலவுத் திரட்டுக்கள் | - |
| மற்றையநியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவிதஅறிவித்தல்கள் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்டஅறிவித்தல்கள் | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, சனவரி மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

கங்கானி லியனகே,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2303 - B 82635 - 403 (2024/12)

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2024 இன் இல. 1055

**தேசிய மாணவச் சிப்பாய் படையணி**

சனாதிபதிஅவர்கள் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வுகள்

*2019, ஒற்றோபர் 15 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கர்னல் ஆக;*

அ/ 5683 மேஜர் ஹேவா வலஸ்முல்லேகே சுமித் குமார
அ/ 5706 மேஜர் கோரலே கெதர மனோஜ் பிரியங்கர வீரசேகர

2020, ஓகத்து 25 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கர்ணல் ஆக;

அ/ 5945 மேஜர் சோமரத்ன கன்னாவெலகே ஜயந்த பிரேம குமார தர்மசிறி

*2021, செத்தெம்பர் 21 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கர்ணல் ஆக;*

அ/ 5356 மேஜர் புலக்பிட்டியநகே தொன் பிரசன்ன அருண குமார விதானகே
அ/ 5928 மேஜர் திசாநாயக்க முதியன்சேலாகே சமந்த பண்டார திசாநாயக்க

*2022, ஓகத்து 31 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கர்ணல் ஆக;*

அ/ 4849 மேஜர் வெலிகல அப்புஹாமிலாகே தொன் ஜகத் விஸ்வமூர்த்தி பீடர் வெலிகல

*2022, செத்தெம்பர் 30 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கர்ணல் ஆக;*

அ/ 5247 மேஜர் செல்லப்புலிகே டைடஸ் ஜெராட் சென்ஸ்டன்ஸ் ரோஸா

*2022, திசெம்பர் 31 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கர்ணல் ஆக;*

அ/ 4126 மேஜர் ராஜபக்ஷ பத்திரன்நெஹெலாகே இந்திக புஸ்பகுமார
அ/ 4845 மேஜர் கமாரச்சி பதிரணகே அஜித் சமந்த பதிரண
அ/ 5375 மேஜர் திசாநாயக்க முதியன்சேலாகே செனவிரத்ன பண்டார திசாநாயக்க
அ/ 5696 மேஜர் கருணாரத்னகே பிரியந்த கமகே
அ/ 5935 மேஜர் அபேகோன் விஜயபக்ஷ நாராயன முதியன்சேலாகே சரத் குமார அபேகோன்
அ/ 5939 மேஜர் வெலிவேரிய லியனகே குஷான் இந்திரஜித் லியனகே
அ/ 5946 மேஜர் பம்மனகே உபாலி திலகரத்ன
அ/ 6039 மேஜர் போயகம ரால்லாகே சந்திரகாந்த ஜயரத்ன
அ/ 6044 மேஜர் ராஜபக்ஷ திசாநாயக்கலாகே அஜித் சமன் ராஜபக்ஷ
அ/ 6045 மேஜர் ஹேவா கீகனகே லலித் பிரசன்ன
அ/ 6055 மேஜர் வஜீர பிரசன்ன பிரேமரத்ன விதானபதிரண
அ/ 6062 மேஜர் பிரதீப் நிஸ்ஸங்க அமரசிங்ஹ

சனாதிபதியின் ஆணைப்படி,

எயார் வைஸ் மார்ஷல்
சம்பத் துய்யகொந்தா (ஓய்வுபெற்ற),
டப்ளிவ்டப்ளிவ்வீ, ஆர்டப்ளிவ்பீ (மூன்று பார்),
ஆர்எஸ்பீ (இரண்டு பார்), யூஎஸ்பீ,
எம்எம்எஸ்சீ (தந்திரோபாய ஆய்வு கற்கை - சீனா),
எம்எஸ்சீ (பாதுகாப்பு ஆய்வு) முகாமைத்துவம்,
எம்எஸ்சீ (பாதுகாப்பு மற்றும் தந்திரோபாய ஆய்வு),
எப்என்டியு (சீனா), பீஎஸ்சீ,
செயலாளர், பாதுகாப்பு அமைச்சு.

2024, நவெம்பர் 12,
கொழும்பு.

12-165

# அரசாங்க அறிவித்தல்கள்

எனது இல. ES/ ST/BUD/8/1/4/8/1

## 1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க பிரிவெனாக் கல்விச் சட்டத்தின் 26, 27 மற்றும் 33 ஆம் உறுப்புரைகளின் கீழ் அமைக்கப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பிரிவெனாக் கல்விக் கட்டளை 03 (06) (அ) இன் கீழான செயற்பாட்டிற்கான அறிவித்தல்

சபரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தின், தெஹியோவிட்ட ஸ்ரீ சுசிலோதய பிரிவெனா விகாரையில் கே/ தெஹி ஸ்ரீ சுசீலோதய ஆரம்ப பிரிவெனா ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அதனை முறையாக பதிவு செய்து தருமாறு அதன் நிறைவேற்றுப் பிரதானி வணக்கத்திற்குரிய அம்பன்வல ஹேமாலங்கார தேரர் அவர்கள் கோரியுள்ளார். அதன் படி 198 பிரிவெனா கல்விச் சபையினால் புதிய பிரிவெனா ஆசிரியர்கள் வழங்காதிருக்கும் நிபந்தனையுடன் மேற்படி பிரிவெனாவை பதிவுசெய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆகையால், குறித்த பிரிவெனாவை 2023.10.20 ஆந் திகதி முதல் முறையாக பதிவு செய்வதற்கு முன்னர் 1980 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பிரிவெனாக் கல்விக் கட்டளைகளின் 03 (06) இன் கீழ் எதிர்ப்புக்கள் அல்லது அவதானிப்புக்கள் ஆகியன இருப்பின் இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு முப்பது (30) நாட்களுக்குள் எனக்கு அறியத் தருமாறு இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாலக களுவெவ,
செயலாளர்,
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சில்,
இசுருபாய,
பத்தரமுல்ல,
2024, நவெம்பர் 29.

12-131

---

## கந்தான புனித செபஸ்தியான் தேசிய ஆலயத்தின் வருடாந்த விழா - 2025

கம்பஹா மாவட்டம்

கந்தான புனித செபஸ்தியான் தேசிய ஆலயத்தின் வருடாந்த விழா 2024, சனவரி 20 ஆந் திகதி நடைபெறும் என்றும், பொது மக்களின் தகவல்களுக்காக விழாவின் காலம் 03.01.2025 முதல் 31.01.2025 வரை என்றும் இதன் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

1. இது தொடர்பாக யாத்திரை கட்டளை 175 இன் கீழ் 2019, ஓகத்து 06 ஆந் திகதியிட்ட வர்த்தமானி அறிவிப்பு எண் 2135/ 34 இல் வெளியிடப்பட்ட ஒழுங்குமுறைகளுக்கு பொது மக்களின் கவனத்தை ஈர்க்கிறது.

2. பகிரங்கப்படுத்தப்பட்ட இச்சட்டதிட்டங்கள் இந்த உற்சவம் நடைபெறும் காலப்பகுதியில் அமுல்படுத்தப்படும்.

லலிந்த கமகே,
மாவட்டச் செயலாளர் / அரச அதிபர் கம்பஹா.

கம்பஹா மாவட்டச் செயலகம்,
2024, திசெம்பர் 06.

12-203

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.